සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
Department of Samurdhi Development
මුදල් අමාත්‍යාංශය
සමෘද්ධි , ගෘහ ආර්ථික , ක්ෂුද්‍ර මූල්‍ය , ස්වයං රැකියා හා ව්‍යාපාර සංවර්ධන රාජ්‍ය අමාත්‍යාංශය
நிதி அமைச்சு
சமுர்த்தி, வதிவிடப் பொருளாதார,நுண்நிதிய, சுயதொழில்,மற்றும் வியாபார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு
Ministry of Finance
State Ministry of Samurdhi, Household Economy, Micro Finance, Self Employment and Business Development

මගේ අංකය
எனது இல DSD/HO/07/SD/08/01/-AP
My No

ඔබේ අංකය
உமது இல ..........
Your No

දිනය
திகதி 2021.03.01
Date

## சமுர்த்தி சுற்றறிக்கை இலக்கம் - 2021/04

சகல மாவட்ட செயலாளர்கள்/மாவட்ட மேலதிக பணிப்பாளர்
தலைமையதிபதிகள்
சகல மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர்கள்,
சகல பிரதேச செயலாளர்கள்,
சகல மாவட்ட சமுர்த்தி உதவி பணிப்பாளர்கள்

## <u>சமுர்த்தி சமூக அபிவிருத்தி வேலைத்திட்டம் - 2021</u>

2030 ஆண்டாகுமிடத்து வறுமை நிலையற்ற சுபீட்சமிகு இலங்கையினை உருவாக்குவதற்காக செயற்படும் முன்னோடி நிறுவனமொன்றாகத் திகழுவது சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் நோக்கமாகும் என்பதுடன் அதிமேதகு ஜனாதிபதி அவர்களால் முன்வைக்கப்பட்டுள்ள சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சமூக அபிவிருத்தியினை உறுதிப்படுத்தும் முகமாக குறித்த கீழ் குறிப்பிடப்படும் விடயங்களுக்கேற்ப 2021ம் ஆண்டில் சமூக அபிவிருத்தி வேலைத்திட்டங்களை செயற்படுத்த வரிசைப்படுத்தப்பட்டுள்ளது.

| சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடணத்தின் குறிப்பிட்ட பகுதியும் முந்தைய தலைப்பும் | சமூக அபிவிருத்தி விடயத்திற்கு இலக்காகிக் கொள்ளக்கூடிய உப தலைப்பு | குறித்த வேலைத்திட்டம் |
|---|---|---|
| • மூன்றாம் பகுதி பாதுகாப்பான ஒரு நாடு | போதைப்பொருளிலிருந்து விடுவிக்கப்பட்ட ஒரு நாடு | போதை தடுப்பு, வீட்டு முகாமைத்துவம் மற்றும் மகிழ்ச்சியான குடும்ப வேலைத்திட்டம் |
| • நான்காம் பகுதி பயனுள்ள ஒரு பிரஜை மற்றும் மகிழ்ச்சியாக வாழும் ஒரு குடும்பம் | ஆரோக்கியத்திற்கு முதலிடம் | i. தொற்றா நோய்களைக் குறைக்கும் பொருட்டு சேதன உணவு மேம்பாட்டு வேலைத்திட்டம்<br>ii. உடல் உள ரீதியான நோய்களைக் குறைக்கும் வேலைத்திட்டங்கள் (உளவளத்துணை) |
| | அதிக திறனுள்ள சிறுவர் சமூகம் ஒன்று | சமுர்த்தி கெக்குலு சிறுவர் கழக வேலைத்திட்டங்கள் (நூலக மேம்பாட்டு வேலைத்திட்டங்கள் |

| | | |
|---|---|---|
| | சமூக பொருளாதாரத்திற்கு பங்களிப்புச் செய்யும் மகளிர் சமூகம் ஒன்று | போதை தடுப்பு, வீட்டு முகாமைத்துவம் மற்றும் மகிழ்ச்சியான குடும்ப வேலைத்திட்டம் |
| | ஒவ்வொரு குடும்பத்திற்கும் சுத்தமான ஒரு வீடு | i. சமுர்த்தி மற்றும் குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கான திரியபியச வீடமைப்பு வேதைத்திட்டம்<br>ii. துப்பரவேற்பாட்டு வசதிகள் (கழிப்பறை வசதிகள்) |
| • எட்டாம் பகுதி<br>நிலைபேறான ஒரு சுற்றாடல் கொள்கை | கழிவு முகாமைத்துவம் | சுற்றாடலைப் பாதுகாக்கும் வேலைத்திட்டங்கள்<br>i. தூய்மையான கடற்கரை/தூய்மையான ஆறுகளைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டம்<br>ii. கழிவு மீள் சுழற்சி வேலைத்திட்டம் |
| • ஒன்பதாம் பகுதி<br>ஒழுக்கமுள்ள, பண்புக்கான சட்டத்தினை மதிக்கும் ஒரு சமூகம் | கலாச்சாரம், இலக்கியம் மற்றும் கலை | சிறுவர் கழக வேலைத்திட்டம் (கலாச்சார மற்றம் இலக்கியம்) |

02. கடந்த வருடங்களைப் போன்று சமுர்த்திப் பயனாளிகள் மற்றும் குறைந்த வருமானம் பெறுவோர் முகங்கொடுக்கும் சமூக உடல் மற்றும் உள ரீதியான பிரச்சினைகளை சரியாக இனங்கண்டு அப் பிரச்சினைகளை குறைத்துக்கொள்ளும் பொருட்டு கூட்டு முயற்சியொன்றாக செயற்படுவதற்கும் நவீன சமூக விரிவாக்கத்தின் முன்னால் மறைந்து செல்கின்ற கலாசார, மற்றம் இலக்கிய பெறுமானங்களை பாதுகாக்கும் நோக்கில் சிறார்களின் இலக்கிய மற்றும் கல்வியியல் ரீதியான மேம்பாட்டினை இலக்கிட்டு சமூக அபிவிருத்தி வேலைத்திட்டங்களை செயற்படுத்துவதற்கும் வேலைத்திட்டங்களை திட்டமிட்டுக்கொள்ளல் வேண்டும்.

03. அதன் பிரகாரம் 2021ம் ஆண்டில் செயற்படுத்த உத்தேசித்துள்ள சமூக அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு முன்னேற்றத் திட்டத்தினையும் செயற்படுத்துவதற்குத் தேவையான ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்கள் இணைப்பு இலக்கம் 01 இலிருந்து 07 வரையில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் ஒவ்வொரு வேலைத்திட்டத்தின் பொருட்டும் மாவட்ட மட்டத்தில் ஒதுக்கப்படுகின்ற நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான விபரங்கள் இணைப்பு இலக்கம் 08இல் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கமைய தங்களது மாவட்டத்தில் சமூக அபிவிருத்தி வேலைத்திட்டங்களை திட்டமிட்டுக்கொள்ளல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| 1 | திரியபியச வீடமைப்பு வேலைத்திட்டம் | இணைப்பு - 01 |
| 2 | போதைப்பொருள் மற்றும் புகைத்தல் தடுப்பு, வீட்டு முகாமைத்துவம் மற்றும் மகிழ்ச்சியான குடும்ப வேலைத்திட்டம் | இணைப்பு - 02 |
| 3 | தொற்றா நோய்களை குறைக்கும் பொருட்டு சேதன உணவு மேம்பாட்டு வேலைத்திட்டம்<br>• உள்ளூர் உணவினை நுகர்வு செய்யும் வேலைத்திட்டம் | இணைப்பு - 03 |
| 4 | சமுர்த்திப் பயனாளிக் குடும்பங்களின் உடல் உள ரீதியான பிரச்சினைகளை குறைக்கும் வேலைத்திட்டம்<br>• சமுர்த்தி பயனாளிகளின் உள சுகாதாரத்தினை மேம்படுத்தும் வேலைத்திட்டம் (உளவளத்துணை) | இணைப்பு - 04 |
| 5 | சமுர்த்தி கெக்குலு சிறுவர் கழக வேலைத்திட்டங்கள்<br>• கலாச்சார மற்றும் இலக்கிய வேலைத்திட்டங்கள்<br>• நூலக மேம்பாட்டு வேலைத்திட்டங்கள் | இணைப்பு - 05 |

| | | |
|---|---|---|
| 6 | துப்பரவேற்பாட்டு கழிப்பறை வசதிகளை வழங்கும் வேலைத்திட்டம் | இணைப்பு - 06 |
| 7 | சமுர்த்தி நிவாரணம் மற்றும் குறைந்த வருமானம் பெறும் வங்கி அங்கத்தவர்களுக்கு வதிவிடத்திற்கான மின்சாரம் வழங்கும் வேலைத்திட்டம் (அனைவருக்கும் மின்சாரம் வழங்குதல்) | இணைப்பு - 07 |
| 8 | சுற்றாடலைப் பாதுகாக்கும் வேலைத்திட்டம்<br>• தூய்மையான கடற்கரை/ தூய்மையான ஆறுகளைக் கட்டியெழுப்பும் ஒன்றிணைந்த வேலைத்திட்டம்<br>• கழிவுப்பொருள் மீள் சுழற்சி வேலைத்திட்டம் (பிற நிறுவனங்களுடன் ஒன்றினைத்து செயற்படுத்தப்படும்) | ஆலோசனைகள் பின்னர் வெளியிடப்படும் |

04. 2021ம் ஆண்டில் உத்தேச இலக்கங்கள் 2,3,4 ஆகிய வேலைத்திட்டங்களை செயற்படுத்துவதற்கு முன்னர் இணைப்பு 09 படிவத்தின் பிரகாரம் அந்தந்த வேலைத்திட்டத்துடன் தொடர்புபடுத்திக்கொள்ள வேண்டிய பொருத்தமானவர்களை இனங்காணும் பொருட்டு ஆய்வு ஒன்றினை மேற்கொண்டு அதனடிப்படையில் பயிற்சி வேலைத்திட்டங்களில் தொடர்புபடுத்தல் வேண்டும்.

05. மேற்படி வேலைத்திட்டங்கள் உரிய பிரகாரம் செயற்படுகின்றதா என அதை அளவிடவும் பிரச்சினைகளை மீளாய்வு செய்வதன் ஊடாக புதிதாக பிரேரனைகளை சமர்ப்பிப்பதற்கும், பிரதேச, மாவட்ட, மற்றும் தேசிய மட்டத்தில் முன்னேற்ற மீளாய்வினை மேற்கொள்வதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. அதன் பிரகாரம் மாவட்ட மட்டத்தில் மாதாந்தம் நடைபெறும் தலைமையக சமுர்த்தி முகாமையாளர்களின் முன்னேற்ற மீளாய்வுப் பட்டறையில் முன்னேற்றத்தினை கலந்துரையாடுதல் வேண்டும். சமூக அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் முன்னேற்றத்தினை விரிவாக தவணையடிப்படையில் கலந்துரையாடும் பொருட்டு மாத்திரம் ஒரு தவணைக்கு ஒரு வேலைத்திட்டம் என்ற வகையில் 04 வேலைத்திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடுகள் வழங்கப்படவுள்ளது.

**பிரதேச மட்டம் :- சகல பிரிவுகளும் உள்ளடங்குகின்ற பிரகாரம் ஒவ்வொரு மாதத்திலும் பிரதேச செயலகத்தின் முன்னேற்ற மீளாய்வினை நடாத்துவதும் முன்னேற்றத்தினை மாவட்ட மட்டத்திற்கு வழங்குவதும்.**

**மாவட்ட மட்டம் :- மாவட்ட சமுர்த்தி பணிப்பாளரின் தலைமையில் பிரதேச செயலகங்களின் முகாமைத்துவப் பணிப்பாளர்கள்/தலைமையக முகாமையாளர்கள் மற்றும் சமூக அபிவிருத்தி உதவியாளர்களின் பங்கேற்புடன் தவணை ரீதியாக ஒரு வேலைத்திட்டத்தினை நடாத்துதல் வேண்டும்.**

**தேசிய மட்டம் :- மாவட்ட சமூக அபிவிருத்தி முகாமையாளர்களினதும் சமூக அபிவிருத்தி உதவியாளர்களும் உட்பட்டதாக வருடத்திற்கு இரு முறை முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தினை நடாத்துதல் வேண்டும்.**

06. வறுமை நிலையினை குறைத்து சமூக சமத்துவத்தினை உறுதிப்படுத்தும் சமூகம் ஒன்றினை உருவாக்குவதற்கு தனி மனிதனை அபிவிருத்தி செய்வது ஆரம்ப நடவடிக்கையாகும். தனிநபர், குடும்பம், குழு மற்றும் மக்களின் ஆற்றல்கள், அறிவு மற்றும் திறமைகளை அபிவிருத்தி செய்து அடிப்படை மனித தேவைகளைப் பூர்த்தி செய்யும் வீடு, மின்சாரம் மற்றும் துப்பரவேற்பாட்டு கருத்திட்டங்களின் பொருட்டு வசதிகளை வழங்குவதும் அதன் மூலம் அவர்களது மனித ஆளுமை அங்கத்துவ செயற்பாடுகள் சமய மற்றும் ஆத்மீக பண்புகளை மேம்படுத்தும் பொருட்டு நேயமுள்ள உயர் சமூக அபிவிருத்திச் சூழல் ஒன்றினை உருவாக்குதல் வேண்டும்.

மேலும் பயனாளிகளின் சேமிப்பு ஆற்றலை மேம்படுத்தும் பொருட்டு புகைத்தல், மதுசாரம், சமூக சீரழிவுகள் போன்ற சமூக முன்னேற்றத்திற்கு தடைகளை ஏற்படுத்தும் சமூக விரோத காரணங்களின் பொருட்டு ஈடுபடும் சீரழிகின்ற பண விரயத்தினை குறைத்தல் வேண்டும். அதன் மூலம் பொருளாதார அபிவிருத்திச் செயற்பாடுகளை விரைவுபடுத்துவதனால் பொருளாதார அபிவிருத்தியினை அடைந்துள்ள மக்களின் நலனின் பொருட்டு விருப்பமுள்ள சட்டத்தினை மதிக்கின்ற சமூக சூழல் ஒன்றினை உருவாக்குவது சமூக அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் பணிகளாகும். இவ்வாறு பௌதீக ரீதியாக சேமிப்புக்களில் ஈடுபடும் ஆட்களும் ஒழுக்காற்றுமிக்கதாக அபிவிருத்தியடையும்.

07. மேற்படி சகல வேலைத்திட்டங்களையும் செயற்படுத்தும் போது உரிய பொது நிர்வாக சுற்றறிக்கைகள் மற்றும் நிதிப்பிரமாணம் என்பவற்றுக்கமைய செயற்படல் வேண்டும் என்பதனை மேலும் அறியத்தருகின்றேன். திணைக்களத்தின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் செயற்படுகின்ற கருத்திட்டங்களின் முன்னேற்றத்தினை ஒவ்வொரு மாதமும் 05ம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில்

பெற்றுக்கொண்டு இணைப்பு இலக்கம் 10, 11A, B மற்றும் 12 இற்கமைய சமுர்த்தி சமூக அபிவிருத்திப் பிரிவுக்கு ஒவ்வொரு மாதமும் 10ம் திகதிக்கு முன்னர் அனுப்புதல் வேண்டும்.

08. துரிதமாக தகவல்களை சமர்ப்பிக்கும் பொருட்டு socialdev@samurdhi.gov.lk என்ற மின்னஞ்சல் முகவரியையோ அல்லது 0112889005 என்ற தொலைநகல் இலக்கத்தினையோ பயன்படுத்திக் கொள்ள முடியும். இச் சுற்றறிக்கை தொடர்பில் மேலதிக விபரங்களை 0112889005, 01128876601 என்ற தொலைபேசி இலக்கங்கள் ஊடாக தொடர்பு கொள்வதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

ஆர்.பீ.பி.திலக்கசிறி
பணிப்பாளர் தலைமையதிபதி

பிரதிகள்

01. செயலாளர், சமுர்த்தி, மனைப்பொருளாதாரம், நுண்நிதி, சுயதொழில், மற்றும் வியாபார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு - த.கூ.க.பொருட்டு
02. மேலதிக செயலாளர் (சமூக அபிவிருத்தி) - த.கூ.க.பொருட்டு
03. கணக்காய்வு அத்தியட்சகர் அரச கணக்காய்வு பிரிவு - த.கூ.க.பொருட்டு
04. பிரதம கணக்காளர், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - த.கூ.க.பொருட்டு
05. பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - த.கூ.க.பொருட்டு
06. சகல பிரிவுத் தலைவர்கள் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - த.கூ.க.பொருட்டு

Translated by:- M.M.M.JAWHAR(Translator)